(ஆ) ஆம் எனில், வரும் நிதி ஆண்டிலாவது மேற்படி திட்டத்தை அமல் செய்ய மாற்று ஏற்பாடுகள் செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) அறியும்.

(ஆ) இத் திட்டத்தை செயல்படுத்துவதில் எதிர்நோக்கிய இடர்பாடுகளைக் களைந்து மானியத் தொகையையும் உயர்த்தி ஆணை ஒன்றை அரசு பிப்ரவரி திங்களில் பிறப்பித்துள்ளது.

சந்தவாசல் கிராமத்தில் ஆதி திராவிட மாணவர் இல்லம் அமைத்தல்.

வினா எண் 513—**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு, போளூர் வட்டம், சந்தவாசல் கிராமத்தில் அரிசன மாணவர் விடுதி அமைக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) வடாற்காடு மாவட்டம், போளூர் வட்டம், சந்தவாசல் கிராமத்தில் அரசு ஆதிதிராவிடர் மாணவர் விடுதி அமைக்க இது வரையில் கோரிக்கை வரவில்லை.

(ஆ) இது குறித்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரிடம் தொடர்பு கொண்டு தேவையையும் நிதி நிலையையும் முன்னிட்டு தக்க தருணத்தில் பரிசீலிக்கப்படும்.

தீண்டாமை ஒழிப்புச் சட்டம்.

வினா எண் 514—**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் 1980 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டவர்கள் எவ்வளவு பேர்?

(ஆ) இந்தச் சட்டம் தவறான முறையில் பயன்படுத்தப் படுவதாக அரசுக்கு ஏதேனும் புகார் வந்ததா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1982 மார்ச் 15]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) தீண்டாமை ஒழிப்பு சட்டத்தின்கீழ் 1980-ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 759

(ஆ) இந்த சட்டம் தவறான முறையில் பயன்படுத்தப் படுவதாக அரசுக்கு எந்த புகாரும் வரவில்லை.

திரு. ஜி. மூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, இது வரை தீண்டாமைக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டவர் களில் எத்தனை பேர்கள் வழக்குகள் மூலமாக தண்டிக்கப் பட்டவர்கள்? எந்த எந்த மாவட்டங்களிலே எத்தனை பேர் கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வியானது 1980 ஆம் ஆண்டு சம்பந் தப்பட்டது. 1980 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் 759 பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு அவர்களிலே தண்டிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 58, விடுவிக்கப்பட்டவர் களின் எண்ணிக்கை 528, நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை 176 ஆகும். மற்ற விவரங்களுக்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, 528 பேர்கள் விடுவிக்கப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த கேஸ்களை அரசாங்க வக்கீல்களே நடத்துகிறார்களா? அல்லது அரிசன நலத் துறையின் மூலமாக வக்கீல்கள் வைத்து நடத்தப்படுகிறதா? அரசாங்க வக்கீல்கள் வழக்குகளை நடத்துகிறபோது சாட்சி சொல்ல வருகிறவர்களை சட்டப்படி சமாதானப்படுத்தக் கூடாது என்று சட்டமிருந்தும் கூட அந்தச் சாட்சி களைப் பயமுறுத்தி அவர்கள் சாட்சி சொல்லச் செல்லாத வகையில் நீண்டகாலமாக வழக்குகள் ஒத்திவைக்கப்படுவதால் தான் சாட்சிகள் அப்படி சாட்சி சொல்ல வராததால்தான் தள்ளப்பட்டன என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, அரசாங்க வக்கீல்கள் வழக்குகளில் ஈடுபடுகின்றபோது சாட்சி சொல்ல வருகிறவர்களை அச்சுறுத்தி வேறுவிதமாகத் தூண்டி விடுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள், அரசு சார்பில் அத்தகைய குறைகள் சொல்லப்படவில்லை. பொதுவாக தீண்டாமைக் குற்றங்களிலே அரசுக்குப் புகார் களை அனுப்புகிறவர்கள் சாட்சி சொல்கிற நேரங்களிலே தங்களுக்கு இருக்கின்ற பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக— கிராமப் புறங்களிலே மற்றவர்களின் துன்புறுத்தல் கூட காரண

மாக இருக்கக்கூடும் என்று கருதுகிறேன்—சாட்சிச் சொல்கிறவர்கள் மாற்றிச் சொல்லுகின்ற நிலைமையும் அத்தகைய நிலைமைகள் ஏற்படவில்லை என்று சொல்லுகின்ற நிலைமையும் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று அரசாங்க வக்கீல்கள் அத்தகைய நிலைமைகளில் ஈடுபட்டதாக அரசுக்குப் புகார்கள் இல்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, நாடு சுதந்திரம் அடைந்து 35 ஆண்டுகள் ஆகியும் கூட அரிசன மக்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதி குறைந்தபாடு இல்லை. அரிசன மக்களுக்கு கொடுமைகளை இழைப்பது அநீதி இழைப்பது என்பது நடந்து வருவதால் அதைத் தடுக்கக்கூடிய முறையில் தடுப்புச் காவல் சட்டத்தை அரசு பயன்படுத்துமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: இந்த சமுதாயத்தில் மக்களின் மீது இத்தகைய வகையில் மற்றவர்கள் ஈடுபடுகிற போது இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அரசுக்கும் காவல் துறைக்கும் பாதுகாப்புக் கோரியும், அதன் காரணமாக மாநில அரசும் மத்திய அரசும் அதிலே அக்கறை செலுத்தி—இந்த நிலைமை தமிழகத்திலே மட்டுமல்ல, இந்திய திரு நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது என்ற வகையிலே—நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன. தடுப்புக் காவல் சட்டத்தின் மூலமாக இத்தகைய குறைகள் இருக்கக்கூடிய பகுதிகளிலே சாட்சி சொல்லக்கூடியவர்கள் இறுதிவரையில் நிலையாக இருந்து சாட்சி சொன்னால்தான் இத்தகைய குறைகளைச் செய்கிறவர்கள்மீது அரசால் நடவடிக்கை எடுக்க முடியும்?

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, இது போன்ற தீண்டாமை சம்பந்தமாக குற்றங்களை ஆய்வு செய்வதற்காக வட்டார அளவிலே ஏதாவது கமிட்டியை அரசாங்கம் அமைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: அது பற்றிய விவரம் இல்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, இந்த தீண்டாமை ஒழிப்பு கேஸ்களிலே சாட்சிகள் எல்லாம் போய் சொல்லி இருந்தாலும் கூட சாட்சிகள் சொல்வது உண்மை என்று தெரிந்திருந்தும்கூட சில சமயங்களிலே கேஸ் தள்ளப்பட்டுவிடுகிறது. ஆகவே இந்தமாதிரி பேசினார்கள் என்றாலும் இந்த மாதிரி அக்கிரமமாக நடந்துகொண்டிருந்தால் உடனே தண்டனை கொடுக்கக்கூடிய நிலைமையை உருவாக்க முடியுமா?

(முற்பகல் 9,50)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய நிலைமைகளை உருவாக்க முடியாது.